# மண்டசூர் பசுபதி நாதர் ஆலயம்

சாந்திப்பிரியா

( ஆன்மீக ஆலயம், பிப்ரவரி, 2007 இதழில் வெளியான இந்த கதையின் விரிவாக்கப்பட்ட மறு பதிப்பு இது )






வழி: இந்துார்- உஜ்ஜயினி – நாக்டா -ரத்லாம் - மண்டசூர்

துாரம் : சுமார் 200-225 கிலோ மீட்டர்

மத்தியப் பிரதேசத்தில் பல ஆலயங்கள் உள்ளன. அவற்றில் புகழ் பெற்றவை சிவன் மற்றும் சக்தி ஆலயங்கள். அதில் ஒன்றுதான் மண்டசூர் பசுபதிநாதர் சிவாலயம். நேகபாளத்தில் உள்ள பசுபதிநாதரைப் போன்றதே இந்த ஆலயமும். மத்தியப் பிரதேசத்தில் உள்ள மண்டசூர் என்ற மாவட்டத்தில் உள்ளது இந்த ஆலயம். 1945 ஆம் ஆண்டிற்கு முன் குவாலியர் மன்னரின் ஆட்சியில் இருந்த இந்த ஊரில் மிகப் பெரும் அளவில் ஜைன மற்றும் இந்து மத வழிபாட்டுத் தலங்களின் கல்வெட்டுக்களே உள்ளன என்பதினால் இந்துக்களை விட முஸ்லிம் பெருமக்களே பெருமளவில் உள்ளனர் என்ற செய்தி வியப்பைத் தருகின்றது.

## ஆலய அமைப்பு :

சிவானா என்ற நதிக் கரையில் அமைந்துள்ள இந்த ஆலயத்தில் உள்ள சிவலிங்கத்தில் இரண்டு அடுக்கில், நான்கு முகங்கள் கொண்ட சிவபெருமானின்

சிற்பம் செதுக்கப்பட்டு உள்ளது. சுமார் எட்டு அடி உயரமும், நாலு அல்லது ஐந்து அடி குறுக்களவும் கொண்ட அற்புதமான ஒரு வித ஊதா வண்ண பளிங்குக் கல்லில் செதுக்கப்பட்டுள்ள சிலைக்கு மொத்தம் எட்டு முகங்கள் உள்ளன. அந்த எட்டு முகங்கள் இரு பிரிவாக, மேற்புறம் நான்கும், அதன் கீழ்புறம் நான்காகவும் இருக்கும் வகையில் அமைக்கப்பட்டு உள்ளது தனிச் சிறப்பு. நான்கு முகங்களில் ஒன்று கிழவராகவும், அடுத்து நடுத்தரமான வயதுடையவர், அடுத்து வாலிபர் மற்றும் கடைசியாக சிறு குழந்தை போன்று தோற்றம் தரும் வகையில் செதுக்கப்பட்டு உள்ளன. அதே நான்கு முகமும் கீழ் பகுதியிலும் காணப்படுகின்றது. ஆலயத்திற்கு நான்கு திசைகளையும் நோக்கிவண்ணம் நான்கு நுழை வாயில்கள். அதி காலை ஐந்தரை மணிக்கு ஆலயம் திறக்கப்பட்டு நதியில் இருந்து எடுத்து வந்த நீரினால் ஜல அபிஷேகம் செய்யப்படுகின்றது. அதன் பின் ஆரத்தி. மழை காலங்களில் நதி நீர் பெருக்கெடுத்து ஓடி ஆலயத்திற்குள்ளும் நுழைந்து சிவ பெருமான் சிலையின் பாதிப் பகுதியை மூடிக் கொள்வதினால் வருண பகவான் சிவபெருமானுக்கு ஜல அபிஷேகம் செய்வதாக நம்புகின்றனர். லிங்கம் ஆறு அல்லது ஏழாம் நூற்றாண்டை சேர்ந்தது என கருதப்படுகின்றது. அதே ஆலயத்தின் இனொரு பகுதியில் அதே அளவிலான சிவ லிங்கம் உள்ளது. அதன் விஷேசம் என்ன எனில் ஒரே அளவிலான, ஒரே மாதிரியான சிற்பத்தைக் கொண்ட ஆயிரத்தி எட்டு சிறு சிவலிங்கங்கள் அதில் செதுக்கப்பட்டு உள்ளன.

## ஆலயம் எழுந்த கதை

சிவானா நதிக் கரையில் ஒரு வண்னான் தினமும் துணிகள் துவைக்க வருவான். அவன் ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருந்த பாறை மீதே துணிகளை துவைப்பான். இப்படியாக செய்து கொண்டு இருந்தவனின் கனவில் ஒரு நாள் சிவ பெருமான் தோன்றி, 'நீ தினமும் என் தலை மீதே துணிகளை துவைக்கின்றாய். இந்த நதியில் முழ்கி உள்ள என்னை வெளியில் எடுத்து ஆலயம் கட்டு' என ஆணையிட மறு நாள் நதிக் கரைக்குச் சென்று அந்த பாறையை நகர்த்த முயற்சித்த பொழுது அதன் அடிப்புறம் பல சித்திரங்கள் செதுக்கப்பட்டு இருப்பதைப் போல உணர்ந்தவன் தன் கிராமத்து மக்களை அழைத்து வந்து சிவபெருமானின் கனவைப் பற்றிக் கூறி, அந்த பாறையில் எதோ சிற்பங்கள் உள்ளது போல உணர்ந்ததைக் கூறினான். அந்த மக்களும் அதை நம்பியதால் பெரிய கயிற்றைக் கட்டி அந்த பாறையை வெளியே இழுக்க எத்தனையோ முயன்றும் அது வெளி வரவில்லை. நாளை பார்க்கலாம் என் திரும்பி சென்று விட்டனர். அன்று இரவு மீண்டும் அந்த வண்ணான் கனவில் சிவ பெருமான் தோன்றி தன்னை இழுக்க அத்தனை சிரமப்படுவதை விட இரண்டு மாடுகளைப் பூட்டிய கயிற்றால் தன்னை வெளியே எடுக்குமாறு கூற மறு நாள் மக்களிடம் அந்த கனவைக் குறித்துக் கூறிய பின் இரண்டு மாடுகள் பூட்டிய வண்டியில் கயிற்றைக்

கட்டி அந்த பாறையை இழுக்க எந்த விதமான பிரச்சனையும் இன்றி பாறை வெளி வந்தது. என்ன ஆச்சரியம்? வெளியில் வந்தது பாறை அல்ல எட்டு முகங்களைக் கொண்ட சிவ லிங்கம். அதை வெளியே எடுத்து உள்ளுர் மக்களின் உதவியுடன் அதே இடத்தில் ஆலயம் அமைத்தான். இந்த கதை வாய் மொழிக் கதையாகவே உள்ளது.